## உ. சிந்தாமணி

### அ. பாவேந்தர் வாழ்வில்

1931 ஆம் ஆண்டு புதுவை "எக்கோல் பிரிமேர்" என்னும் அரசினர் பாடசாலையில் "ழுய்ல் பெரி" என்பாரின் ஆண்டுவிழா, மிகச் சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்யப்பெற்றது.

"ழுய்ல்பெரி" என்பவர் பிரஞ்சு நாட்டு மக்களால் மிகவும் போற்றக் கூடிய ஒருவராவர். அக்காலத்தில், மதத் துறைக்கு அடிமைப்பட்டிருந்த கல்வித் துறையை மீட்டுக் குடியாட்சியிடம் ஒப்படைத்தவர் அவர். ஆதலால் அவர் நினைவு நாளைப் பிரஞ்சு மக்கள் சிறப்பாகக் கொண் டாடினார்கள். பிரஞ்சுக் குடியேற்ற நாடுகளிலும் இவ்விழா கொண் டாடுவது வழக்கம். அம்முறையில், புதுவையிலும் நடத்தப் பெற்றது.

இவ்விழா நிகழ்ச்சிகளில் சிறு நாடகம் ஒன்றும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்குக் கதை, வசனம், பாட்டு அமைக்கும் பொறுப்பும், நாடக உறுப்பினர்க்கேற்ப மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அதைச் செவ்விய முறையில் நடத்திக் கொடுக்கும் பொறுப்பும் அப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றியிருந்த திரு கனக சுப்புரத்தினம் (கவிஞர் பாரதிதாசன்) அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டது. அவரும் அதை நல்லமுறையில் அமைத்திருந்தார்.

விழா நாள் வந்தது. விழாவில், ஆசிரியப் பெருமக்களும், அலுவலர்களும், மற்றும் கற்றறிந்த பெரியவர்களும் குழுமி இருந்தனர். அந்த விழா நிகழ்ச்சி கவர்னர் (ழுய்லானோ என்ற நினைவு) அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அந்த நாடகத்தில் இடம் பெற்ற கதைக்குச் "சிந்தாமணி" என்பது பெயர். இதில், கதைக்குத் தொடர்பில்லாத ஒரு தனிப் பாட்டுப்பாட ஏற்பாடு செய்திருந்தார் கவிஞர். அந்தப் பாட்டின் கருத்து, அன்றைய அரசியலில் மிக முக்கியத்துவம் பெற்றிருந்த ஒன்றாகும்.

சுதந்தரம் - சமத்துவம் - சகோதரத்துவம் என்ற மூன்று தத்துவங் களையும் அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட பிரஞ்சு குடியாட்சியை உலகமே பாராட்டியது! போற்றிப் புகழ்ந்தது! இவ்வுயர்ந்த

நெறி கொண்ட பிரஞ்சு ஆட்சி, பிரஞ்சிந்தியாவில் மட்டும் மாறுபட்டுத் தன் பெருமைக்குக் களங்கம் ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

மேலோர் - கீழோர் என்ற பிரிவு, சமத்துவ நெறிகொண்ட ஓர் ஆட்சிப் பரப்பில் இருப்பதென்றால், யாவர்க்கும் வியப்பைத்தானே அளிக்கும். அந்தப் பாகுபாடு அன்றைய பிரஞ்சிந்தியாவான புதுவையில் வளர்க்கப்பட்டு வந்தது!

மேலோர் என்பவர் முதற்பிரிவினர். அதாவது, முதல்தரக் குடிமக்கள்; முதல் பட்டியலைச் சேர்ந்தவர்கள். கீழோர் என்பவர் இரண்டாம் பிரிவினர். அதாவது இரண்டாம் தரக்குடி மக்கள்; இரண்டாம் பட்டியலைச் சேர்ந்தவர்கள்.

முதற் பிரிவைச் சேர்ந்தவர்கள் பிரஞ்சிந்தியாவிலேயே சுமார் 800 - க்கும் குறைவானவர்களே இருந்தார்கள். இவர்கள் பிரஞ்சுக் காரர்களும், அவர்களைப் பின்பற்றிய ஒரு சிலருமேயாவார்கள். இரண்டாம் பிரிவைச் சேர்ந்தவர்கள் பிரஞ்சிந்தியக் குடிமக்களாகிய சுமார் மூன்று இலட்சம் தமிழர்கள்.

இரு சாராருக்கும் சட்டமன்றப் பிரதிநிதித்துவம் சரிசமமாக இருந்ததால், சிறுபான்மையாராகிய முதற் பிரிவினர்க்கு அரசாங்கத்தில் அதிகச் சலுகையும், மேம்பாடும், எல்லா நலன்களும் கிடைத்து வந்தன. இதனால் அவர்கள் பெரும் பான்மையினராகிய மூன்று இலட்சம் மக்களையும் அடக்கி ஆண்டுவர முடிந்தது.

இக் கொடுமையை மக்கள் சற்றும் உணராதபடி அன்றைய அரசியல் சூழ்நிலைகள் இருந்து வந்தன. படித்த வட்டாரமே இக் கொடுமையை உணரவில்லையென்றால், மற்றவர்களைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?

எனினும், மானவுணர்வுடைய சிலர், ஏற்படும் இடையூறு களையும் பொருட்படுத்தாது இக்கொடுமையை ஒழித்துக் கட்ட முன் வந்தனர். பிரெஞ்சு ஆட்சிக்கும் பிரஞ்சிந்திய மக்களுக்கும் தீராக் களங்கத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கும் இப்பழிப்பை நீக்கப் போர்க்கொடி உயர்த்தினர். இதற்குச் சட்ட நுணுக்க வல்லுநரும், சிறந்த வழக்கறிஞருமான உயர்திரு ஏ. செல்லான் அவர்கள் தலைமை தாங்கினார்கள் இவருக்கு ஆதரவாகப் பலரும் ஒன்று சேர்ந்து கிளர்ச்சியை வலுவடையச் செய்தனர். அவர்களுள், நம் புரட்சிக் கவிஞரும் ஒருவராவர்.

மக்களின் உரிமைக் குரலாக முழக்கமிட நம் கவிஞர் முன் வந்ததில் வியப்பு இல்லை! "முயல்பெரி" விழாக் கொண்டாட்டத்தில், உயர் அதிகாரிகளான பிரஞ்சுக்காரர்களும், படித்தவர்களும் நிறைந் திருப்பர் என்பதையறிந்த நம் கவிஞரவர்கள், சும்மா இருந்து விடுவாரா? தம் இலட்சியக் கருத்தை உணர்த்த வாய்த்ததெனக் கருதி அப்பாடலைப் பாடச் செய்திருந்தார். அன்று, அப்பாடல் மிக இனிமையாகவும் அழகாகவும் பாடப்பட்டது. அப்பாட்டு வந்திருந்த எல்லோர் உள்ளத் திலும் ஓர் உணர்ச்சியைத் தூண்டிவிட்டது என்பதை அப்பாட்டு முடிந்ததும் எழுந்த ஆரவாரக் கையொலியே உணர்த்திற்று. தலைமை ஏற்ற திரு கவர்னர் அவர்களும் அப்பாட்டின் கருத்தை உணர்ந்து தம் முடிவுரையில் "பிரஞ்சு ஆட்சிக்கே களங்கம் விளைவிக்கும் இந்த வாக்காளர் பேதத்தை ஒழித்துக்காட்ட என்னால் கூடியவரை முயல்வேன்!" என்று உறுதி கூறினார்.

சில காலத்துக்குப் பின்னர், அந்த வாக்காளர் பேதம் ஒழிந்தது. அனைவரும் பெருமகிழ்ச்சியுற்றனர். அதுவரை, பல கூட்டங்களிலும் பாடப்பட்டு, மக்களுக்கு உணர்ச்சியூட்டி வந்த கவிஞரின் அந்த இலட்சியத் தனிப்பாட்டு இது:

"கூவாயோ கருங்குயிலே
யாவரும் ஒன்றென்றே - கூவாயோ
ஏவலர் இந்தியர்கள், இரண்டாம் தொகுதியென்றார்
இக்குறை நீங்கிற் றென்றே இனிதாய் நன்றே
குவலயத்தில் சமத்துவநிலை காட்டவந்த
பிரெஞ்சுக் குடியரசின் நிழலில்
இவனுயர்ந்தோன் இவன் தாழ்ந்தோன் என்றுரைத்தால்
யார் சகிப்பார் அந்த அமலை?
கவிந்திருக்கும் ஒருகுடைக்கீழ் உள்ளவரின்
சிலர்க்கு நிழல்: சிலர்க்கு வெளிலோ?
குவிந்த பொருளோ விஷமோ சமமாக
அடையாத தெவ்வகையிலோ?
மேலவர் என்றோர் தொகுதி: மீதிப் பெயர்க்கோர் தொகுதி!
மேன்மைக் குடியரசில் இதுவோ கதி?"

குயிலை விளித்து உரிமைக்குரல் எழுப்பிய கவிஞரின் கொள்கைப் பிடிப்பை இப்பாடல் உணர்த்துவதை உற்று நோக்கிப் பயன் அடைவோமாக!

*- புதுவை சிவம் என்கிற ச. சிவப்பிரகாசம்,*
*பாரதிதாசன் குயில், புதுச்சேரி,* **10.6.1967**

• • •

## ஆ. சிந்தாமணியில் ஒரு பாட்டு

சிந்தாமணி என்று இங்கே குறிப்பிடுவது, ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான சீவ சிந்தாமணியன்று; புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களால் எழுதப்பெற்ற ஒரு சிறு நாடக நூலுக்கு அமைந்த பெயரே சிந்தாமணி என்பது (இந்நாடகம் 1931 ஆம் ஆண்டு முய்ல்பெரி, விழாக் கொண்டாட்டத்தின் போது அரசினர் உயர்நிலைப் பள்ளியில் பிரஞ்சிந்திய ஆளுநர் முன்பாக நடத்திக் காட்டப்பட்டதேயாகும்.)

இச்சிறு நாடக நூல், "படித்த குடும்பம் சர்வகலாசாலை" என்ற கருத்தை உள்ளடக்கமாகக் கொண்டதாகும். இந்நூலின் கருத்தே "குடும்ப விளக்கு" என்னும் கவிதை நூலாக வெளிவரலாயிற்று

இந்நாடகம் நடைபெற்றபோது கவிஞரால் இயற்றபெற்ற பல பாடல்கள் பாடப்பட்டன. அவற்றுள் ஒன்றுதான்.

"உலகமே உயர்வடைவாய்!
உள்ளவர்க்கெல்லாம் நீயே தாய்!"

என்ற பாடலுமாகும்.

இங்கு எடுத்துக் கொண்டது இப்பாடல் பற்றியல்ல; இக் கவிதையின் தலைவியான சிந்தாமணி என்னும் தாய்க்கும், அவள் மகளான சிறுமிக்கும் நடைபெற்ற உரையாடல் பற்றியதாகும்.

சிந்தாமணியின் மகளான சிறுமி, பள்ளிக்கூடம் சென்று வருகிறாள். அவள் நடுநிலைக் குடும்பத்தைச் சேர்ந்தவள். ஆரவாரமற்ற நாகரிக வாழ்வை மேற்கொண்ட குடும்பத்தில் தோன்றியவள். ஒரு பள்ளி என்றால், அதில் பலவகைக் குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகளும் படிப்பது இயல்பு. பணக்காரர் வீட்டுப் பிள்ளைகளாயிருந்தால் அதற்கேற்ற அணிவகைகளோடு பள்ளிக்கு வருவதைக் காணலாம். அதிலும் சிறு குறும்புக்காரப் பிள்ளைகள் - செருக்குக் கொண்ட பிள்ளைகள், ஏழ்மை நிலையிலுள்ள மற்ற பிள்ளைகளைப் பார்த்துக் கேலியும் கிண்டலும் செய்வது உண்டு. அந்த வகையில், இந்த எளிய சிறுமியைப் பார்த்துக் கேலி செய்தார்களோ என்னவோ! அல்லது

இந்தச் சிறுமி, மற்ற பணக்காரச் சிறுமியர்போல் விளங்க வேண்டு மென்று எண்ணினாளோ என்னவோ! தனக்கு நகை ஏதுமில்லாக் குறையால், மனம் மிக வருந்தியவாறே வருகிறாள். வந்த சிறுமியைச் சிந்தாமணி அன்போடழைத்து, பின், பள்ளியில் நடைபெற்ற பாட விவரங்களைக் கேட்கிறாள். சிறுமியிடமிருந்து விடை வரவில்லை சிந்தாமணி திடுக்கிட்டவளாய் அவளின் வருத்தமுற்ற முகத்தைக் கவனிக்கிறாள்; காரணம் வினவுகிறாள்.

"பள்ளியில் பல பிள்ளைகளும், பலவகை நகைகளணிந்து பொலிவோடு வருகிறார்கள். எனக்கு ஒரு நகைகூட இல்லை. இதனால் மற்றவர்களைப் பார்க்கும் போது எனக்கு வெட்கம் உண்டாகிறது. ஆகையால், என் காதுக்கேனும் ஒரு தோடு கட்டாயம் வாங்கிப் போட்டாக வேண்டும். அல்லாவிட்டால் நான் எப்படிப் பள்ளிக்கூடம் போக முடியம்?" என்றாள் சிறுமி.

சிறுமியின் வருத்தத்திற்குக் காரணம் புரிந்து கொண்டாள் சிந்தாமணி. அவளின் வருத்தத்தைப் போக்குவதற்குத் தோடு (கம்மல்) வேண்டியதுதான்; அதைச் சிந்தாமணியால் வாங்கித் தர முடியும். ஆனாலும், சிறுமியர்க்கு, அதிலும் படிக்கும் சிறுமியர்க்கு, நகை யணிவதில் ஆர்வம் எழாமல் இருப்பதே நல்லது என்பது அவளின் எண்ணம்; சிறு வயதிலேயே நகையணிவதில் ஆர்வத்தை உண்டாக்குவது பிறகு பெற்றோர்களுக்குத் தொல்லையாக முடியும்; அச்சிறுமியர்க்கும் கேடாய் முடியும். எனவே, தன் மகளின் எண்ணத்தை மாற்ற நினைத்து, குழந்தாய்! காதுக்குக் கம்மல் அழகு தருவதுதான். ஆனாலும், அது உண்மையான அழகைத் தருவதல்ல. அதைவிடச் சிறந்த அழகைத் தருவது ஒன்றுண்டு. அதைத்தான் நீ அணியவேண்டும்! என்கிறாள்.

அதற்குச் சிறுமி "என்னம்மா" அது? என ஆவலோடு கேட்கிறாள். சிந்தாமணி, 'கல்வியறிவிற் சிறந்த நல்லோர்களது அறிவுரையை உன் காதிற் போட்டுக்கொள்ள வேண்டும். நீ அப்படிச் செய்தால், பலரும் உன்னைப் பாராட்டுவார்கள். நகையணிந்த காதின் அழகைவிடக் கல்விச் செல்வத்தையுடைய காதே சிறந்த அழகினையுடையதாகும்' என்கிறாள். அப்பாடல் வருமாறு:

மகள் கூறுவது:

அம்மா என் காதுக்கொரு தோடு - நீ
அவசியம் வாங்கிவந்து போடு!
சும்மா இருக்க முடியாது - நான்
சொல்லிவிட்டேன் உனக்கிப்போது! (அம்மா)

தாய்சொல்வது:

காதுக்குக் கம்மல் அழகன்று - நான்
கழறு வதைக் கவனி நன்று!
நீதர் மொழியைவெகு பணிவாய் - நிதம்
நீகேட்டு வந்துகாதில் அணிவாய்! (காதுக்)

அதைக்கேட்ட சிறுமிக்கும் ஏதும் சொல்ல இயலவில்லை. ஆயினும் மனதை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு, 'நகைகள் ஒன்றும் அணிந்து செல்லாவிட்டால், என்னைப் பார்க்கும் பிள்ளைகள் 'பக்கி' (விதி யற்றவள்) என்றல்லவா கேலி செய்வார்கள். ஆதலால் கைக்கு இரண்டு வளையல்கள் வீதம், கடன் பட்டாவது போடம்மா!' என்று நயந்து கேட்கிறாள்.

இதைக்கேட்ட தாய் புன்முறுவல் செய்து, சிறுமியை அணைத்து அவள் தலையைத் தடவிக்கொடுத்தபடி, "கண்ணே! வளையல் என்பது வளைந்திருப்பது; அதாவது தொடர்பு அறாமல் இருப்பது; இதை அணிவதால்தான் கைக்கு அழகும், மதிப்பும் உண்டாகும் என்பதல்ல. சுற்றம் என்பது, சுற்றியிருப்பது. அதாவது, வாழ்வில் ஏற்படும் நல்ல தீய காரியங்களில் உறவு அறாமல் சூழ்ந்திருப்பது. அத்தகைய சுற்றத்தார் களும் நல்லோர்களும் நம் வீட்டுக்கு விருந்தினராக வந்தால் வந்த அவர்கள் களைப்புத்தீர விருந்தோம்பு! அதுவே, பலரும் போற்றத் தகுந்த உயர்ந்த நகையாகும். அத்தகைய வரவேற்பைப் பெறாத கைகள், எத்தனை வலையல்களை அணிந்துதான் என்ன பயன்? அந்தக் கைகளை யார் மதிப்பார்கள்? அக்கைகளிலுள்ள வளையல்கள், அக் கைகளுக்கிடப்பட்ட விலங்கன்றோ!" என்றாள்.

மகள் சொல்வது:

கைக்கிரண்டு வளையல் வீதம் - நீ
கடன்பட்டுப் போட்டிடினும் போதும்!
'பக்கி' என் றெனையெல் லோரும் - என்
பாடசாலையிற் சொல்ல நேரும்! (கைக்)

தாய்:

வாரா விருந்து வந்த களையில் - அவர்
மகிழ உபசரித்தல் வளையல்!
ஆராவமுதே மதி துலங்கு - கண்ணே
அவர் சொல்வ துன்கைக்கு விலங்கு! (வாரா)

மறுமொழி சொல்லிவிட்ட தாயின் முகத்தை, உற்று நோக்கினாள் சிறுமி. 'நகைகள் அணிந்து கொள்வதை உலகம் மதிக்கிறது! அப்படி நகைகள் அணிந்து மதிப்பாகச் செல்லாதவர்களை யாரம்மா மதிக்கிறார்கள்? பள்ளிப் பிள்ளைகள் நடுவே எனக்கும் ஒரு மதிப்பு இருக்க வேண்டாமா? வேண்டாம் அம்மா! நீங்கள் மனம் வைத்தால், எப்படியும் என் குறையைத் தவிர்க்க முடியும்! ஏதேனும் ஒரு நகையாவது வாங்கிப் போடம்மா!' என்று கெஞ்சுகிறாள்.

இதற்கு எப்படி விடையிறுத்து அவளைத் தேற்றுவது என்பது சிந்தாமணிக்குச் சிறிது கடினமாகவே இருந்தது. எனினும், அவள் மனதை எப்படியேனும் மாற்றியாக வேண்டும் என்ற உறுதியில் கூறுகிறாள். 'பெண்களுக்குச் சிறந்த அழகிய நகைகள் எது தெரியுமா கண்ணே!

"குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்ட ழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல; நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி யழகே அழகு"

என்று ஆன்றோர்கள் கூறியுள்ளார்கள். கல்பதித்துச் செய்த நகைக ளெல்லாம், பெண்களுக்கு அழகைத் தருவனவல்ல; அவை ஆறாத புண்ணைத் தருவனவாகும். கற்றறிந்த பெண்களையே உலகம் மதிக்கும்; புகழும்; ஆதலால், நீ உலகத்தார் நடுவே சிறந்த புகழுக் குரியவளாக மதிக்கத் தக்கவளாக விளங்குவதே, உனக்குப் பேரழகைத் தருவதாகும். ஆதலால், நீ கற்பதில் மகிழ்ச்சி கொள்' என்று அவள் கன்னத்தை வருடி

முத்தமிட்டுக் கல்வியில் ஆர்வத்தை உண்டாக்கு கிறாள். சிறுமியும் சிந்தித்துத் திருந்தித் தெளிவு பெறுகிறாள்! அப்பாடல் வருமாறு:

மகள் சொல்வது:

ஆபர ணங்கள் இல்லையானால் - என்னை
ஆர்மதிப் பார்தெருவில் போனால்?
கோபமா அம்மா இதைச் சொன்னால்? - என்
குறை தவிர்க்க முடியும் உன்னால்!

தாய் சொல்வது:

கற்பது பெண்களுக்கா பரணம்! - கெம்புக்
கல் வைத்த நகை தீரா ரணம்!
கற்ற பெண்களை இந்த நாடு - தன்
கண்ணில் ஒற்றிக் கொள்ளுமன் போடு! (கற்பது)

மாணவ மாணவியர் நல்லொழுக்கம் கூறும் அக்காட்சியும், கருத்தமைந்த பாடலும் அந்நாளில் நம் பாவேந்தரால் எழுதப்பெற்றவை. எல்லோரும் பாராட்டினர். அன்று மட்டுமல்ல; இவை என்றென்றும் பாராட்டுவதற் குரியன அன்றோ'

*- புதுவை சிவம் என்கிற ச. சிவப்பிரகாசம்,*
*பாரதிதாசன் குயில், புதுச்சேரி, 10.9.1967*

◆ ◆ ◆